**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 30/2024</u>**

பெயர் : அழகுசுந்தரம் P.W.1.

த/பெ. : பக்கிரிசாமி

தேதி : 14.07.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

**1.** வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் கலைவாணி என்பவர் வாதி இளங்கோவனுக்கு பாத்தியபட்ட சர்வே எண்ணை குறிப்பிட்டு 10 பிளாட்டுகளை கிரயம் பெற்றுள்ளார். அதை மேற்படி சர்வே எண்ணில் இருந்து நீக்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1ம் பிரதிவாதி வாதிக்கு நேரடியாக கிரயம் ஏதேனும் செய்துகொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

2. 1ம் பிரதிவாதி ராமசாமி என்பவருக்கு தான் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ராமசாமிக்கு எழுதிக்கொடுத்த நிலத்தின் சர்வே எண். 172/1A ஆகும். அது தற்போது 172/1A1A என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி ராமசாமிக்கு மேற்படி நிலத்தை 1985ம் ஆண்டு எழுதிக்கொடுத்தார். தாவா சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் வாதி பெயரில் உள்ளது. தாவா சொத்திற்கு அருகில் 1ம் பிரதிவாதிக்கு எவ்வளவு இடம் பாத்தியப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தில் வாதி கிரயம் பெற்ற சர்வே எண்ணான 172/1 A1A என தவறுதலாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியிடமிருந்து 2ம் பிரதிவாதி எவ்வளவு சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் கூற இயலும். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்ற சொத்தின் சரியான புலஎண் தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி வாங்கிய கிரய பத்திரத்தில் புல எண்ணில் தவறு இருந்தால் அதை திருத்தம் செய்ய கோரி 2ம் பிரதிவாதி தான் 1ம் பிரதிவாதியிடம் கேட்க வேண்டும் என்றாலும், அதை கேட்பதற்கு வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

4. புல எண் 172/1A1A ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3 ஏக்கர்

1/3 செண்ட் ஆகும். புல எண் 172/1A ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியமா என்றால் தெரியாது. வாதி கிரயம் பெற்றுள்ள சொத்தின் நான்கெல்லை வேறு, 2ம் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ள கிரய சொத்தின் நான்கெல்லை வேறு என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்திலும், 2ம்பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்து சொத்திலும் அத்துமீறு நுழைந்து பிரச்சனை எதுவும் செய்துள்ளாரா என்றால் இல்லை.

5. 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து உட்பட மொத்தம் 9 ஏக்கர் 13 செண்ட் இடம் பாத்தியபட்டதாக இருந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி ராமசாமி அவர்களுக்கு 1985ம் ஆண்டு கிரயம் செய்து கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2ம் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ள சொத்தில் வாதிக்கு எந்நவித உரிமையும் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ராமசாமிக்கு என்வருக்கு கிரயம் செய்து கொடுத்த போது தாவா சொத்தின் சர்வே எண் 172/1A என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்துகொடுத்த கிரய ஆவணத்தின் சர்வே எண் தவறாக குறிப்பிடபட்டுள்ளது என்பதை வருவாய் துறை ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தில் புல எண் தவறுதலாக குறிப்பிடபட்டுள்ளதை காண்பிக்க வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

6. தாவா சொத்தினை நில அளவையர் மூலம் அளவீடு செய்து அதன் விஸ்தீரணம் மற்றும் புல எண் சரியாக உள்ளதா என பார்த்தோமா என்றால் பார்த்தோம். இந்த வழக்கில் நீதிமன்றத்தின் மூலம் தாவா சொத்தை அளவீடு செய்வதற்கு மனு தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்தை அளவீடு செய்யக்கோரி மனு தாக்கல் செயய தயாராக உள்ளோமா என்றால் இல்லை.

7. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு செய்து கொடுத்த கிரயம் ஆவணத்தின் சரியான புல எண்ணையே குறிப்பிட்டு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தின் மூலம் வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்தை அளவீடு செய்து சரியான புல எண்ணை கண்டறிய வாதி எந்த நடவடிக்கையும் எடுக்காததால் வாதி கோரி பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. கிரய பத்திரத்தில் புல எண்ணை தவறு ஏற்பட்டால் அதை சரிசெய்வதற்கு வருவாய் துறை அதிகாரிகளை அனுகி சரிசெய்ய வேண்டுமே தவிர நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேட இயலாது என்றால் சரியல்ல.